Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 36 இதழ் - 2 பிப்ரவரி - 2023

தனிப்பிரதி ரூ.10/-



# 28.1.2023 அன்று

**ஈரோடு மாவட்டம் காஞ்சிகோவிலில் காங்கேயம் எக்லீசியா டிரஸ்ட் நடத்திய 22-வது இலவச பொது மருத்துவ முகாமின் போது...**






## ஆசானின் அறிவுரையிலே ...


| | | |
|---|---|---|
| 1. | நிறுவன ஆசிரியர் உரை | 3 |
| 2. | மகத்தான நியாயத்தீர்ப்பின்... | 8 |
| 3. | பெண்கள் பகுதி | 11 |
| 4. | வாலிபர் பகுதி | 14 |
| 5. | சிறுவர் பகுதி | 19 |
| 6. | நாளை நாளை என்று... | 20 |
| 7. | தேவனுடைய நாமம்... | 23 |
| 8. | பொய்யான மனித சபை | 26 |
| 9. | மணவாளியே! | 30 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 36 Feb - 2023 Issue - 2


நிறுவன ஆசிரியர் உரை

## உன்னை நீயே எண்ணிப்பார்!

தேவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரினங்களைக் காட்டிலும் மனிதனே மிகச் சிறந்தவன். அவனைப் படைப்பின் சிகரம் என்றே கூறலாம். ஏனெனில், அவன் தேவ சாயலிலே படைக்கப்பட்டவன். அவனைப் படைக்கும் போது வேறு எந்தப் படைப்புக்கும் செலவிட்டிராத சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. அண்டசராசரங்கள் அனைத்தையும் வாய்ச் சொல்லால் படைத்தவர். மனிதனை மட்டும் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதி, அவனை ஜீவாத்துமாவாக்கினார் [ஆதி 2:7], மேலும், படைக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் ஆண்டு அனுபவிக்கும் அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுத்தார். [ஆதி 1:26-28].

ஆனால், ஆதி மனிதன் இந்த உண்மைகளை தெரிந்தோ, தெரியாமலோ அசட்டை செய்து, தடம் மாறிக் கெட்டுப் போனான். தனக்கு தேவனால் கொடுக்கப்பட்ட சிறப்பு நிலையை எண்ணிப் பார்க்கத் தவறியதால், மனிதனுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. இப்பொழுதும் கூட மனிதன் விரும்பினால் தேவ சாயலில் வளர்ந்து ஆசீர்வாதத்தின் உச்சிக்குப் போகலாம் அல்லது பாவத்தின் பலனாகிய படு பாதாளத்தை அடையலாம். இந்தப் பேருண்மையை உணர்ந்து கொள்ளாமல் மனித இனம் இன்றைக்கு' அழிவை நோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கிறது. இந்தப் பரிதாப நிலையை அவனுக்கு எடுத்துக்கூற எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டாலும் அது அதிகமல்ல.

ஆனால், நிலைமை என்ன? வரவர மனித இனம் தன்மேன்மையையும், சிறப்பு நிலையையும் பற்றிய மதிப்பீட்டில்

தொடர்ந்து தவறுகள் செய்வதாகவே தெரிகிறது. ஒருபுறம், மனிதனுடைய ஆற்றலையும் வேலை செய்யும் திறனையும், பெருகி வரும் இயந்திர சாதனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, மனிதனின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் எடை போடுகி றார்கள். ஒரு சிறந்த அறிவியல் நூலை பழைய பேப்பர் காரனிடம் போட்டால் அதன் உயர்வை அவன் அறியமாட்டான். எடைக்குரிய காசு தான் கொடுப்பான். அது போன்றுதான் இதுவும்.

மற்றொருபுறம் வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவினால் ஏற்படும் கண்டுபிடிப்புகள், சாதனைகள் ஆகியவைகளை மனதில் கொண்டு, மனிதனால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்று இறுமாந்து, கடவுளே இல்லை அதைப் பற்றிய சிந்தனையெல்லாம் வீணர்களின் பொழுதுபோக்கு, மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி மண்ணுலகை விண்ணுலகு ஆக்கலாம், மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் நிலை நாட்டலாம் என்று பேசி, மனிதன் மேல் தேவைக்கும் அதிகமான நம்பிக்கை வைத்து அவனைக் கடவுள் ஸ்தானத்துக்கு உயர்த்தி விடுகிறார்கள். ஆனால், ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு மேற்சொன்ன இரண்டு சிந்தனையோட்டங்களுமே அபாயகரமானவை; உண்மைக்குப் புறம்பானவை என்பது விளங்கும்.

அப்படியானால் மனிதனுடைய உண்மை நிலை தான் என்ன? என்ற கேள்வி எழுவது நியாயமே. ஒரு பொருளை உருவாக்கியவருக்குத் தான் அதனுடைய உண்மையான மதிப்பும், உயர்வும் மிக நன்றாகத் தெரியும். ஆகவே, மனிதனைப் படைத்துப் பராமரித்து பாதுகாத்து வருகிறவர். மனிதனின் உண்மையான தன்மையையும், நிலையையும் பற்றி என்ன கூறுகிறார் என்று கீழ் வரும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்துச் சிந்திப்போம்.

மனிதனுடைய உண்மையான நிலையை விளக்குவதற்கும். அவனுக்கு நம்பிக்கையூட்டி அவனை உற்சாகப்படுத்துவதற்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த பூலோகத்தில் சஞ்சரித்த நாட்களில் இரண்டு முறைகளைப் பயன்படுத்தினார். ஒன்று உபதேசம்: தனக்குக் கிடைத்த வாய்ப்பு, அனைத்தையும், மாந்தருக்கும், படைத்தவராகிய தேவனுக்கும் உள்ள உறவின் இரகசியத்தை எளிய உவமைகளைக் கொண்டு பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கிக் கூறினார். தான் சொல்லுகிற அனைத்தும் உண்மை என்பதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக மனிதரால் செய்யமுடியாத பலவிதமான அற்புத அடையாளங்களையும், பலத்த செய்கைகளையும் செய்து உறுதிப்படுத்தினார். [யோவான் 20: 30.31].

இன்னொன்று : மனிதர்கள் பாவம் செய்யாமல் வாழமுடியும். அப்படிப்பட்ட வாழ்க்கை முறையால்தான் தேவனைப் பிரியப்படுத்த

முடியும் என்று அவருடைய தூய்மையான வாழ்க்கை மூலம் வழி காட்டினார்.

மேலும், கிறிஸ்து மனுக்குலத்தின் மீது அபரிதமான அன்பு காட்டினார். (மத் 9 : 36: 14:14 மாற்கு 1 : 41) ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்து மன உருக்கமும், ஏழை எளிய மக்கள் மீது பரிவும் பாசமும் கொண்டவர் என்பதைத் தெளிவாக்குகிறது. அந்நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்கள் மக்களை வஞ்சித்து, தங்களுடைய வாழ்க்கை வசதிக்காக, சுயநலத்துக்காக பாமர மக்களைப் பலிகடாக்களாக்கி, சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். ஊருக்குத்தான் உபதேசம்; உனக்கு இல்லையடி' என்ற பாணியில் தாங்கள் உபதேசிக்கிறதை அவர்கள் கடைப்பிடிக்காமல் போலித்தனமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். (மத் 23:1-2).

மனிதனுடைய உண்மையான மதிப்பை அறிந்திருந்த இயேசுவுக்கு இது மிகுந்த மனவேதனையைத் தந்தது. வாழ்க்கைப் பெருஞ்சுமையால் தள்ளாடி, கூனிக் குறுகிப் போய் புழுவாய் நெளிந்து கொண்டிருந்த மக்களையும், நோய் நொடிகளால் பாதிக்கப்பட்டு துன்பத்தில் உழன்று கொண்டிருந்த மக்களையும் அவர் பார்த்தபொழுது, அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்கள் கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் கூறி அரவணைத்துக் கொண்டார். அவர்களையும் தேவன் நேசிக்கிறார் என்பதை அவர்களுக்கு உணர்த்த பல விதத்திலும் முயன்றார்.

உலகத்தில் அற்பமாக எண்ணப்படுகிற பறவை இனங்களில் அடைக்கலான் குருவியும் ஒன்று. அப்படிப்பட்ட எளிய உயிர்கள் கூட ஆண்டவருடைய பராமரிப்புக்குத் தப்புவதில்லை. அப்படியிருக்கும் போது. அவருடைய படைப்பின் சிகரமான மனிதனைப் பற்றி அக்கறைப்பட மாட்டார் என்று நினைத்து, நம்பிக்கை இழந்து சோர்ந்து போவது எவ்வளவு அறியாமை! மனிதனுடைய உயிர் இருக்கட்டும். அவனுடைய முடிகளில் ஒன்றுகூட அவருடைய உத்தரவு இல்லாமல் கீழே விழாது. ஆகவே, மனிதனின் சிறப்பு நிலையைக் குலைத்துப் போடும் எந்த இழி செயலுக்கும் ஆளாகக் கூடாது. அதற்கு விலையாக உன் உடலையே அர்ப்பணிக்க நேர்ந்தாலும் அஞ்சக்கூடாது என்று தைரியம் கொடுக்கிறார். (லூக் 12:4-7).

மனிதன் உடைக்காகவும், உணவுக்காகவும் படும் பிரயாசமும், அணுகும் முறையும் தேவையில்லாதது. காலையில் பூத்து, மாலையில் வாடிப் போகும் மலர்கள் காடுகளிலும், மலைகளிலும் யாருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் இன்றி கண்ணைக் கவரும் வண்ணங்களில் ஜொலிக்கின்றன. மிகவும் ஆடம்பரப் பிரியரும், வசதிகள் பல படைத்தவருமாகிய சாலமோன் என்னும் அரசனே

கூட அவ்வித வண்ணக் கலவை ஆடைகளை அணிந்திருக்க மாட்டான். அப்படியிருக்கும் போது தான் படைத்தவற்றில் சிறந்தவனாகிய மனிதனுக்கு ஏன் செய்யமாட்டார்? அதேபோல் உணவு சம்பந்தப்பட்ட விஷயத்திலும் பறவைகளை ஒப்பிட்டுக் காட்டினார். அவைகள் விதைப்பதும் இல்லை. அறுக்கிறதும் இல்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதும் இல்லை. ஆனால், எங்காவது பறவையினம் பட்டினியால் மாண்டு போயிற்று என்ற செய்தி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படியிருக்க, மனிதன் உடைக்காகவும், உணவுக்காகவும் தன் ஆத்துமாவை அடகு வைத்து நீதி நேர்மை, அன்பு, இரக்கம் ஆகிய நற்பண்புகளை விற்று, அழிந்து போகிற இந்த உடலைப் பேண வேண்டுமா? என்று கேட்டுச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

தேவன் வகுத்துத் தந்திருக்கிற பிரமாணங்களில் கூறப்பட்டுள்ள நியமங்களைக் கடைப் பிடித்து வாழ்; அப்பொழுது நீ விரும்புகிற அனைத்தையும் தருவார் என்று ஆன்மாவுக்கும், இறை வழிபாட்டுக்கும் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். (மத் 6 : 22–23).

பாதை தடுமாறி எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் அழிவை நோக்கித் துரித பயணம் போய்க் கொண்டிருக்கும் மனுக்குலத்தின் மீது தேவன் எவ்வளவு கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை விளக்க ஒரே அதிகாரத்தில் மூன்று உவமைகளைக் கூறி விளக்குகிறார். காணாமற் போன ஆடு, காணாமற் போன வெள்ளிக் காசு, காணாமற் போன மகன் ஆகிய மூன்று உவமைகளிலும், ஒரே ஒரு பாவியின் மனந் திரும்புதல் பரலோகத்தில் எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய காரியம் என்பதை விளக்கி, தேவன் மானிடர் மேல் கொண்டுள்ள அளவற்ற அன்பைச் சுட்டிக் காட்டுகிறார். (லூக்கா 15)

பெரும்பான்மையான மனிதர்களுக்கு, தாங்கள் சரீரமும், ஆன்மாவும் உடைய சிறப்பு ஜீவன்கள் என்கிற காரியம் விளங்குவதில்லை. விளங்கினாலும் அதை அவ்வளவு முக்கியமான விஷயமாக எடுத்துக் கொள்வதில்லை. சரீரத்தின் அழிந்து போகிற தன்மையையும், ஆன்மாவின் நிரந்தரமான தன்மையையும் விளக்குவதற்குப் பின்வருமாறு கூறுகிறார். **ஆத்துமாவைக் கொல்ல வல்லவராயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுபவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம். ஆத்து மாவையும் சரீரத்தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்** (மத் 10:28). மேலும், ஆன்மாவோடு ஒப்பிடும்போது சரீரம் மிக அற்பம். ஆகவே, அதனைப் பேணிக் காப்பதற்கு பெரும் பிரயாசம் எடுத்துக் கொண்டு, அதனுடைய விருப்பத்துக்கு

அடிமையாகிவிடக் கூடாது என்று விளக்குவதற்கு ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல என்கிறார். (லூக் 12 : 15) ஆனால் நடைமுறை தலைகீழாக இருக்கிறது. நிலையற்றதும், அழிந்து போகக் கூடியதுமான யாக்கையைப் பேணிக்கொண்டு, என்றென்றும் நிலைத்து நிற்கிறதான ஆன்மாவை அசட்டை செய்வது எவ்வளவு மதியீனம்! ஆன்மாவை அசட்டை செய்கிறது எவ்வளவு மதியீனம்! அரிசியைக் குப்பையில் கொட்டிவிட்டு உமியைப் பத்திரப்படுத்துகிறவனைப் பார்த்து எள்ளி நகையாடுகிறோம். ஆத்துமாவை அடகு வைப்பதற்கு நாம் வெட்கப் படுவதேயில்லை. அப்படிப்பட்டவர்களைப் பார்த்து **மதிகேடனே!** என்று வேதம் விளிக்கிறது. (லூக் 12: 20). மேலும், இயேசு இப்படிப்பட்டவர்களை நோக்கி ஒரு கேள்வி கேட்கிறார். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்திக் கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? தன் ஜீவனுக்கு ஈடாக அவன் என்னத்தைக் கொடுப்பான்? (மத் 16: 26).

மேற்சொன்ன காரியங்கள் அனைத்தையும் சிந்தித்துப் பார்க்கும் போது, மனிதன் தன்னைப் படைத்த கடவுளை மறந்து, புறக்கணித்து விட்டு, தன் சொந்த வழி நடந்து நிம்மதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அடையவும், நித்திய ஜீவனைப் பெறவும் இயலாது. படைத்தவரை மதித்துக் கனம் பண்ணி, அவர் வகுத்துத் தந்துள்ள பிரமாணங்களைப் பற்றிக் கொண்டு அதன்படி வாழ்ந்து வந்தால், இம்மையில் சமாதானமும், மகிழ்ச்சியும் கிட்டும். மறுமையிலும் கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் பாக்கியமும், என்றென்றும் கவலையில்லாத, துன்பம் கலவாத மகிழ்ச்சியான வாழ்வும் வாழலாம் என்ற உண்மை தெளிவாகிறது.

நண்பனே, சகோதரியே! இப்பொழுது நம்முடைய தீர்மானம் என்ன? கிறிஸ்துவை நம்முடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்கு முழு மனதுடன் கீழ்ப்படிந்து, நீதியாகவும், நேர்மையாகவும், பண்புடனும், அன்புடனும் விசுவாசத்துடனும் வாழ்ந்து அவர் நமக்காக வைத்திருக்கும் ஆனந்த பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ள இன்றே உறுதி செய்து கொள்ள தேவன் நம்மை ஏவுவாராக! ✝

**திருமறை ஆசான்** இதழின் நிறுவன ஆசிரியர் பக்திமிகு **எ.ச. செல்வநாயகம்** ஐயா அவர்கள் மறைந்து 30 ஆண்டுகள் நிறைவடைகிறது. அவர் நினைவாக அவர் எழுதின இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. – **ஆசிரியர்**

# மகத்தான நியாயத்தீர்ப்பின் நாள்

J.C. சோட்

**நி**யாயத்தீர்ப்பின் நாள் உண்டு என்று வேதாகமம் போதிக்கிறது. பல காரணங்களினிமித்தம் அது ஒரு மகத்தான நாளாயிருக்கப் போகிறது.

- **அந்த நாள் எந்த நாளென்று எந்த ஒரு மனிதனும் அறியான் – அந்த நாள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நாள்.** வேதாகமத்தில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி.9:27).

- **ஏற்கனவே வாழ்ந்த எல்லோரும் மற்றும் இனி வாழப்போகிற அனைவரும் அந்நாளில் அங்கே இருப்பார்கள்.** இது கற்பனை செய்து பார்க்கக் கடினமாக உள்ளது. ஆனால், இது வேத வல்லமைக்கு அப்பாற்பட்டதல்ல. பவுலடியார் இவ்விதம் எழுதியுள்ளார். ஆதலால், நம்மில் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:12).

- **இயேசுவின் மூலமும், அவருடைய வார்த்தையின் மூலமும் தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார்**: எபிரெய ஆசிரியர், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிப தியாகிய தேவனிடத்திற்கும், நீதிமான்களுடைய ஆவிக ளினிடத்திற்கும் (எபி. 12:23) என்று சொல்லியுள்ளார். மேலும், பவுலடியார் இது குறித்து அத்தேனே பட்டணத்தா ருக்கு விவரிக்கும் போது, அறிமையுள்ள காலங்களை தேவன் காணதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்தி ரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கி றார். அதிலே அவர் தாம் நயமித்த மனுஷனை மரித்தோரிலி ருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக் கும் விளங்கப் பண்ணினார் என்றான் (அப்.17:30,31). கிறிஸ் துவும் இவ்விதம் கூறியுள்ளார், **என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க் கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவ னைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்** (யோவான் 12:48).

- **நாம் நம்முடைய வார்த்தைகளிலும், எண்ணங்களிலும், வாழ்க்கையிலும் எப்படியிருந்தோமா அதனடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவோம்.** கிறிஸ்துவானவர் இவ்விதமாக

வெளிப்படுத்தியுள்ளார். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்தி லிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார் (மத்.12:35-37). வெளி.21:12 யும் இங்கே வாசிக்கவும்.

- **அந்நாளில் கர்த்தர் பட்சபாதமுடையவராயிருக்க மாட்டார்**: தேவன் பற்றி நாம் இவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறோம். **தேவனிடத்தில் பட்சபாதமில்லை** (ரோமர் 2:11). கொலோச பட்டணத்து சபையாருக்குப் பவுல் இவ்விதம் விளக்கினார். அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை (கொலோ.3:25). கொர்நெலியவும், அவன் வீட்டாரும் மனமாற்றமடைந்த அச்சமயத்தில், புறவினத்தைச் சார்ந்தவர்கள் முதன் முதலாக நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த போது, வசனம் இப்படியாகச் சொல்லுகிறது. அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (அப்.10:34,35).

- **நியாயத்தீர்ப்பு இறுதியானது**: ஒருவன் மரித்துவிட்டால், அவன் நிலையை கர்த்தரின் சமூகத்தில் மாற்ற முடியாது. அவனுடைய உறவுகள் தங்கள் ஜெபத்தாலோ அல்லது மற்றவர்களுக்குப் பணம் கொடுத்து அவன் இரட்சிப்படையும்படியாய் ஜெபிக்கச் சொல்வதாலோ எவ் விதப் பயனும் இல்லை. அவனுக்கு மறுபடியுமான ஒரு வாய்ப்பு என்பது இல்லை. **பாவக்கடன் நிவிர்த்தி** என்னும் கொள்கை மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று. இப் போதனையை நாம் வேதாகமத்தில் எங்கும் காண முடி யாது. ஆகவேதான், இப்பூமியில் நாம் **வாழ அனுமதிக்கப்படு கிற காலத்திலேயே**, தேவச் சித்தத்திற்கு கிறிஸ்துவின் உபதே சத்தின்படி கீழ்ப்படிந்து மரணபரியந்தம்

உண்மையாயிருந்தது [மாற்கு 16:16; வெளி. 2:10] தேவனைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டும்.

- ✪ **கர்த்தர் துன்மார்க்கரை நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்களை நித்திய ஜீவனுக்கும் நியாயந்தீர்ப்பார்:** [ மத். 25:46]. பரலோகம் எவ்வளவு காலத்துக்கோ, அதே கால அளவைக் கொண்டது தான் நரகமும். இதன் பொருள், இழந்து போனவர்கள், பாவிகள், தேவனை ஏற்காதவர்கள், உண்மையாய் பக்தி நிலையில் வாழாதவர்களாகிய இவர்கள் நரகத்தில் தள்ளப்பட்டு முடிவில்லாத காலத்துக்கு வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். இப்படிச் செய்வது சரியான ஒன்றா? ஓர் அன்புள்ள தேவன் இப்படிச் செய்வாரா? இங்கே நாம் தேவனைக் குற்றப்படுத்த முடியாது. தேவன் எல்லா மனிதர்களையும் நேசித்து எல்லாக் காலத்திலும் வாழ்ந்த வாழும் மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாய்த் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பிக் கொடுத்தார். அந்த அன்பை, அந்தக் கிருபையை மற்றும் அந்த இரக்கத்தை நாம் அசட்டை செய்வோமானால், நம்முடைய செயலுக்கான விளைவை நாம் சந்தித்துத்தான் ஆக வேண்டும். அதற்கு மாறாக யாரெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் பரலோக பாக்கியம் பெற்று என்றென்றும் கர்த்தரோடு வாசம் செய்வார்கள்.

நியாயத்தீர்ப்பு பற்றியும், அதற்கு நம்மை ஆயத்தமாக்கி வேண்டியதன் அவசியம் பற்றியும் மற்றும் நீதிமான்களென்று நியாயந்தீர்க்கப் படுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள் பற்றிய அறிவும், தெளிவும் உள்ளவர்களாய் நாம் ஒவ்வொருவரும் இருப்போமாக!

✝

---

### *ஐந்து விதமான கண்ணீர்.*

*1. விசுவாசத்தின் கண்ணீர் - மாற்: 9:24*
*2. தியானத்தின் கண்ணீர் - லூக்: 7.38*
*3. ஊழியத்தின் கண்ணீர் - அப்:20:19*
*4. ஜெபத்தின் கண்ணீர் - 2தீமோ:1:3,4*
*5. புத்தி சொல்லும் கண்ணீர் - அப்:20:31*

பெண்கள் பகுதி

# ஆண்டவரே எனக்கு உதவி செய்யும்!

Sis. ரேச்சல் ராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதல் கூறுகிறேன் இம்மாதம் உங்களோடு சேர்ந்து வேதாகமத்தை படிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் அருமையானவர்களே கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம் ஜெபம் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று ஒன்று தெசலோனிகேயர் 5:17 இல் வாசிக்கிறோம் இவ் வசனத்தின் படி பார்த்தால் மூன்றே எழுத்துக்கள் கொண்ட இந்த வசனம் நமக்கு எவ்வளவு ஆறுதலையும் நம்பிக்கையையும் கொடுக்கிறது நம் வாழ்வில் நடக்கும் எல்லா நிகழ்வுகளையும் அது நன்மையானதோ, தீமையானதோ அழகானதோ, அசிங்கமானதோ எல்லாவற்றையும் அவர் அறிந்திருக்கிறார்

அன்பான சகோதரிகளே! தேவன் எல்லாவற்றையும் அறிந்திருப்பதால் நம்முடைய தேவைகளில் அவருடைய இரக்கத்திற்காக அவரிடம் மன்றாடுவது மிகவும் அவசியம். நமக்கு அவருடைய கிருபை வேண்டும், உதவி வேண்டும், தேவன் நமக்கு வேண்டும் (மத். 15:22-28) வசனப் பகுதியில் ஒரு கானானிய ஸ்திரீ தன் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறார், அவளை சுகப்படுத்தும் என்று கேட்டுக்கொண்டாள். அழகான, எடுத்துக்காட்டான சம்பவம் இது. கூட்டத்தில் சென்று, சத்தமிட்டு கூப்பிட்டு, கெஞ்சுவதை உங்களால் பார்க்க முடிகிறதா? சீஷர்கள் கூட அவளை அனுப்பி விடும் நம்மை பின் தொடர்ந்து கூப்பிடுகிறாளே என்று சொல்லுகிறார்கள். ஆனால், வழக்கம்போல தெளிவாக யாவரும் அறிந்த இடங்களிலும், தெளிவாகவும், வெளிப்படையாகவும் காரியங்களை அறியும் மக்கள் மத்தியிலும் தான், சகலத்தையும் அறிந்தவரும் ஆசானுக்கெல்லாம் ஆசானுமாகிய நம் இயேசு கிறிஸ்து செயல்பட ஆரம்பிக்கிறார். இயேசுவுக்கு நன்றாக தெரியும் தன்னுடன் இருந்த சீஷர்கள் என்ன நினைக்கிறார்கள், அந்த ஸ்தரீ என்ன நினைக்கிறாள் என்று. தான் என்ன செய்யப் போகிறார், என்ன பேசப் போகிறார் என்பதும் அவருக்கு தெரியும்.

இந்த கானானிய ஸ்திரீ இயேசுவையும் அவரைச் சுற்றிலும் இருந்தவர்களைப் பற்றி கொஞ்சமும் பயப்படாமல், தன் பிள்ளையினுடைய பிரச்சினை எப்படியாவது தீர வேண்டும்,

இயேசு மட்டும்தான் இதற்கு தீர்வு என்பதை அறிந்து ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்ற மூன்று வார்த்தைகளை மட்டும் சொன்னாள். எப்படியாவது தன் மகள் அந்த கொடிய பிசாசின் கையில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும், இயேசு மட்டும்தான் அதற்கு உதவி செய்ய டியும், அவர்தான் தன் ஒரே நம்பிக்கை என்று விசுவாசித்தாள்.

இயேசு அவளிடம் பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடக்கூடாது என்று பதிலளித்தார். இந்த வார்த்தை அவளை நிறுத்தவில்லை. அவளோ சாவுக்கும், வாழ்வுக்குமான போராட்டத்தில் இருந்தாள். மீண்டும் பதிலளிக்கிறார். நிலையான நம்பிக்கை தனக்கு இயேசு தான் என்பதை இப்பதில் காட்டுகிறது. மெய் தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளை தின்னுமே என்றாள். இங்கே அவள் முக்கியமற்றவளாக எண்ணப்பட்டாலும், பெரியளவு விசுவாசம் கொண்டவளாய் இருந்தாள். மிகவும் புத்திசாலித்தனம் கொண்ட அவள் இயேசுவின் வார்த்தைப்படியே மெய் தான் ஆண்டவரே என்று ஒத்துக் கொண்டாள். அவள் சிறியவள் தான், ஒரு பெண் தான், அதுவும் புறஜாதி ஸ்திரீ, இருப்பினும் இயேசுவின் கவனத்திற்காக உறுதியாய் இருந்து பெற்றுக்கொள்ள நினைக்கிறாள். ஏன்? தன் பிரச்சனைக்கு ஒரே உதவி இயேசு மட்டும்தான். நம்பிக்கையின் எல்லைக்கு வந்து விட்டாள். மகளின் கொடிய வேதனை அவளை இவ்வாறாக செய்ய வைக்கிறது. அவளால் எங்கும் திரும்ப முடியவில்லை. நம்பிக்கை அற்றுப்போகும் நிலைமை ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, தன் மகள் மீது உயிரையே வைத்திருக்கும் ஒருத்தியாக இருந்தாள்.

இயேசுவின் கட்டளையை பாருங்கள் ''ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது '' என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். தாயின் விசுவாசம் அவ்வளவு பெரிதாயிருந்தது.

அன்பானவர்களே குடும்பத்தில் ஒருவர் பாடுபட்டால், குடும்பமே அல்லோலகல்லோலப்பட்டு விடும். அதுவும் அது ஒரு பெண் பிள்ளை. குடும்பமே சிக்கி, சீரழிந்து கொண்டிருந்திருக்கும். சாதாரண வாழ்க்கை என்பதே அவர்களுக்கு இருந்திருக்காது. எனவே தான், அந்த கானானிய ஸ்திரீ ''ஆண்டவரே எனக்கு உதவி செய்யும்!'' என்று கதறியிருக்கிறாள்.

ஏன் இந்த சம்பவம் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது, இந்த சிறிய சம்பவம் உங்களுக்கும், எனக்கும் ஏன் இவ்வளவு பெரிய முக்கியமாக தெரிகிறது? ஏனென்றால், நாம் அவள் நிலைமையை புரிந்து கொள்ள முடிகிறது. நாம் இப்பேர்ப்பட்ட நிலையை கடந்தும், சந்தித்தும் வாழ்ந்து கொண்டுள்ளோம், தன் பிள்ளையின் பிரச்சனையை தாங்கிக் கொள்ள டியாமல் தவித்த தாயின் நிலையில் இன்று நாம் அநேகர் இருக்கிறோம். தேவன் மாத்திரமே உதவி செய்ய முடியும், பிரச்சினையை தீர்க்க முடியும், சுகம் கொடுக்க முடியும். தேவன் எல்லாவற்றையும் மாற்ற முடியும். தேவன் மட்டுமே, மத். 19:25– ல் பார்க்கிறபடி **மனுஷரால் இது கூடாதது தான்; தேவனாலே எல்லாம் கூடும்** என்றார்.

அருமையானவர்களே இதை விசுவாசிப்போம். தேவ மகிமை காண்போம்.

✝

## *மறுபடியும்...*

*1. மறுபடியும் பிறக்க வேண்டும் - யோவான்.3:7*

*2. மறுபடியும் ஜெபித்தார் - 1பேதுரு.1:4*

*3. மறுபடியும் உபதேசிக்க வேண்டும் - எபி.5:12*

*4. மறுபடியும் ஒட்ட வைப்பார் - ரோமர்.11:23*

*5. மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் - எபி.6:6*

*6. மறுபடியும் இயேசு வருவார் - அப்.1:11*

*7. மறுபடியும் வெளிப்படுத்தினார் - யோ.21:1*

வாலிபர் பகுதி

# தோமா சந்தேகிப்பவனா?

## Dr. ஏபில் நாயகம்

அன்பான வாலிபர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். இந்த மாதமும் இவ்விதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். விசுவாச வாழ்க்கையிலே சந்தேகம் என்பது ஒரு தவறான காரியமாக பலராலே பார்க்கப்படுகிறது. பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களை நாம் புரட்டிப் பார்க்கும் பொழுது, பல முக்கிய தேவ மனிதர்கள் சந்தேகப்பட்டு இருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் பார்க்க முடியும். ஆபிரகாம், மோசே, கிதியோன், தாவீது, யோவான்ஸ்நானன் இவர்களுடைய வாழ்க்கையில் சந்தேகங்கள் வந்தே உள்ளன. அந்த வரிசையிலே, சந்தேகத்தின் குணத்திற்காகவே அறியப்படும் அப்போஸ்தலனாகிய தோமாவும் இருக்கிறார். அந்த வரிசையில் இருக்கிறார் என்று சொல்வதை விட நம்மால் அந்த வரிசையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பது தான் உண்மை. தோமாவை குறித்தான சில உண்மைகளை இந்த மாதத்தின் பாடத்திற்காக தெரிந்து கொள்ளலாம்.

நான்கு நற்செய்தி புத்தகங்களிலும் தோமா என்ற பெயர் பதிவிடப்பட்டிருக்கிறது. மத்தேயு, மாற்கு, லூக்கா – இம்மூவரும் சீஷர்களுடைய பெயர் பட்டியலில் மட்டும் தோமாவை பற்றி எழுதியிருக்கிறார்கள். அப்போஸ்தலர் நடபடிகளை எழுதின லுக்கா, முதலாம் அதிகாரத்தில் மீண்டுமாக பெயர் பட்டியலில் தோமாவை எழுதியிருக்கிறார்.தோமாவை குறித்து நாம் முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும் என்றால் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதிய நற்செய்தியை நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவது, தோமாவை குறித்து யோவான் தம்முடைய சுவிசேஷத்தில் பதிவிட்டு இருக்கிற காரியங்களை நாம் பார்க்கலாம். யோவான் 11– ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் பொழுது, பெத்தானியா கிராமத்தில் இயேசுவின் அன்பை பெற்றிருந்த ஒரு குடும்பத்தை குறித்து நாம் பார்க்க முடியும். அந்தக் குடும்பத்தில் ஒருவனாகிய லாசரு வியாதியாக இருந்தான். இந்த செய்தியை இயேசுவிடம் சொல்வதற்கு, லாசருவின் சகோதரிகள் ஆள் அனுப்பினார்கள். 11:7– இல், இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி மறுபடியும் யூதேயாவுக்கு போகலாம் என்று கூறினார். ஆனால், சீஷர்களுக்கு ஒரு பயம். அது, கொஞ்சம் நாட்களுக்கு முன்னால் இயேசுவை கல்லெறியும்படி யூதர்கள் இயேசுவைத் தேடி துரத்தினார்கள். எனவே, மீண்டும் எருசலேமின் பகுதிகளுக்குச்

சென்றால் இயேசுவுக்கு ஆபத்து இருக்கிறது என்று உணர்ந்து, நீர் அவ்விடத்திற்கு போகலாமா? என்று கேட்டார்கள். 16- ஆம் வசனத்தை நாம் கவனிக்கும் பொழுது, தோமா மற்ற சீஷரை நோக்கி அவரோட கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான். பிரியமானவர்களே, தோமாவுக்கு இருந்த விசுவாசத்தையும், தைரியத்தையும், உறுதியையும் இந்த வசனத்திலே நாம் பார்க்க முடியும். எருசலேமின் பகுதிகளுக்கு சென்றால் இயேசுவுக்கு என்ன ஆகுமோ என்று அஞ்சிய சீஷர்களை, தைரியப்படுத்தி இயேசுவோடு நாம் செல்லலாம் என்று பதினொருவரையும் ஒன்று சேர்த்தான். அதன் பின், இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமிற்கு சென்றார்கள்.

அடுத்தபடியாக, தோமாவின் குணாதிசயத்தை யோவான் 14 ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடியும். இதற்கு முந்தைய அதிகாரத்தில் தம்முடைய சீஷர்களிடத்திலே, அவருடைய மரணத்தை குறித்தும், அவர் இனி அவர்களோடு இருக்கப் போவதில்லை என்பது குறித்தும் இயேசு தம்முடைய சீஷர்களிடத்திலே பகிர்ந்து கொள்வதை நாம் வாசிக்க முடியும். பேதுரு இயேசுவை நோக்கி நீர் எங்கே போகிறீர்? என்று கேட்பதையும் நம் வாசிக்க முடியும் [13:36]. இந்த செய்தியை நிமித்தம் கலங்கிப்போன சீஷர்களை, சமாதானப்படுத்தும் விதமாக இயேசு கூறிய வார்த்தைகள் 14 ஆம் அதிகாரத்தில் இருக்கிறது. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று இயேசு ஆரம்பித்து பல உண்மைகளை சீஷர்களிடத்தில் பகிர்ந்து கொண்டார். 14:4 இல், நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்று இயேசு சீஷர்களிடத்தில் சொல்கிறார். இயேசு என்ன பேசுகிறார் என்ற காரியத்தை குறித்துத் தெளிவில்லாத 11 பேரும் அமைதியாக இருந்தார்கள். தோமாவோ, தெளிவை பெற விரும்பினான். இயேசு சொல்கிற காரியம் புரியவில்லை, என்றாலும் பரவாயில்லை என்ற நிலையிலே இல்லாமல், தெளிவை தேடுகிற ஒரு நபராக, சரியான புரிதலை விரும்புகிற ஒரு நபராக தோமா இருந்திருக்கிறார். அதன் வெளிப்பாடு தான் 5 ஆம் வசனம். தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான். இந்தக் கேள்விக்கான பதில் தான், இன்று உலகம் அனைத்திற்குமான விமோசனம். அவ்வளவு வல்லமை மிகுந்த வார்த்தைகளை இயேசுவின் வாயாலே வந்ததற்கான காரணம், தோமாவின் ஆர்வமும், தெளிவு பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் தான். எந்த காரியமாக இருந்தாலும் தெளிவைப் பெற வேண்டும் என்ற குணத்தை தோமா பெற்றிருந்தார். தோமா இயேசுவை விசுவாசிக்கவில்லை என்றோ,

அவர் சொன்ன காரியங்களில் தோமாவுக்கு நம்பிக்கை இல்லை என்றோ நாம் கூறி விட முடியாது. அது அவருடைய குணாதிசயம். இன்றைக்கு நாம் கூறுகிறோம் அல்லவா, பகுத்தறிவு என்று – ஏன், எதற்கு, எப்படி என்று கேட்கும் குணத்தை தோமா அன்றைக்கே பெற்றிருந்திருக்கிறார்.

இப்பொழுது நாம் யோவான் 20– ஆம் அதிகாரத்திற்கு வருவோம். கிறிஸ்தவத்தின் அடிநாதமாக கருதப்படும் இயேசுவின் உயிர்த்தெழுதல் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்து உயிரோடு எழுந்ததற்கு பிறகு, சீஷர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தரிசனமானார்[20:19]. ஆனால், அப்பொழுது மற்ற சீஷர்களுடன் தோமா இல்லை[20:24]. இயேசு கிறிஸ்து தங்களுக்கு தரிசனமானார் என்ற நற்செய்தியை மற்ற சீஷர்கள் தோமாவிடம் சொன்ன பொழுது தோமா நான் இயேசுவைக் கண்டால் ஒழிய விசுவாசிக்க மாட்டேன் என்று கூறினார். பிரியமானவர்களே, விசுவாசி களுடன் நமக்கு இருக்க வேண்டிய ஐக்கியத்தின் அவசியத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் இந்த சம்பவம் நமக்கு வெளிப்படுத்துகிறது. சீஷர்களோடு இல்லாததினாலே, ஒரு முக்கியமான நிகழ்வை தோமா தவற விட்டான். அது அவனை சந்தேகத்திற்கு தள்ளியது. கண்டுதான் விசுவாசிப்பேன் என்று அவனை கூற வைத்தது. இது இன்றைக்கும் நமக்கு பொருந்தும். சபை கூடி வருதலை நாம் தவற விடும் பொழுதும், விசுவாசிகளுடன் ஐக்கியத்தை நாம் தவிர்க்கும் போதும் அது நமக்கு பாதகமாக அமைகிறது. பல நன்மையான காரியங்களை, ஆசீர்வாதங்களை நாம் இழந்து விட நேரிடுகிறது. சரி, நடந்த காரியங்களின் விளைவாக தோமாவுக்கு சந்தேகம். இந்த சந்தேகம், தோமாவை நாம் அவிசுவாசத்திற்கு உதாரணமாக வைக்கிறோமே, அந்த அளவிற்கு மோசமான ஒன்றா என்ற கேள்வி எழுகிறது.

நாம் ஏற்கனவே, தோமாவின் குணாதிசயங்களை வசனத்தின் அடிப்படையிலேயே பார்த்தோம். தோமா, இயேசுவோடு மரிக்கவும் துணிந்தவனாக இருந்தான். காரியங்களை ஆராய்ந்து, பிறகு தெளிவை பெற்றுக் கொள்ள விரும்பும் ஒரு குணம் பெற்றவனாகவும் இருந்தான். அதன் அடிப்படையிலே, இவனுக்கு விசுவாசம் இல்லாமல் இருந்திருக்கும் என்று நம்புவதற்கு சற்று கடினமாக இருக்கிறது. எனவே, சந்தேகங்கள் தேவனால் எப்படி பார்க்கப்படுகிறது என்ற கேள்வியும் நமக்கு இருக்கிறது. இங்கே தோமாவின் சந்தேகம், இயேசு கிறிஸ்துவாலே கண்டிக்கப்படவில்லை.

லூக்கா எழுதின சுவிசேஷம் 2 ஆம், அதிகாரத்திலே சகரியாவை குறித்தும், மரியாள் குறித்தும் நாம் பார்க்கிறோம்.

இருவருக்கும் தேவதூதனாலே ஒரு செய்தி சொல்லப்படுகிறது. இரண்டும் கிட்டத்தட்ட ஒரே விதமான செய்தி தான். இருவருக்கும் சந்தேகம். இருவரும் தேவதூதனிடத்தில் கேள்வி கேட்கிறார்கள். சகரியா அவிசுவாசத்திற்காக தண்டிக்கப்படுகிறார். மரியாள் தண்டிக்கப்படவில்லை. இரு சம்பவங்களையும் நாம் கவனிக்கும் பொழுது, சந்தேகமும், சந்தேகத்தின் விளைவாக நாம் செயல்படும் விதமும் தேவனாலே பார்க்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். சகரியாவுக்கு குமாரன் பிறப்பான் என்று சொல்லப்பட்ட பொழுது இதை நான் எதினால் அறிவேன்? என்ற கேள்வியை கேட்கிறார். அவருக்கு இருந்த சந்தேகம் தானும் தன்னுடைய மனைவியும் வயது சென்றவர்களாக இருக்கிறோம். எனவே, இது எப்படி சாத்தியம் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக இருந்தது. ஆனால், அந்த சந்தேகத்தை வெளிப்படுத்தின விதம், தேவனாலே சரியானதாக பார்க்கப்படவில்லை. இதை எதினால் அறிவேன் என்று கேட்பது, நடப்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்று கேட்பது போல. தனக்கு ஒரு அடையாளம் வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த சந்தேகத்தின் வெளிப்பாடு சகரியாவின் நிகழ்வில் இருந்து நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால், மரியாளின் சந்தேகம், இது எப்படி ஆகும்? என்று கேட்ட பொழுது அவளுக்கு விவரிக்கப்பட்டது. தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று சொல்லப்பட்டது. அதன் பின் மரியாளுடைய வார்த்தைகளை நாம் கவனிக்கும் பொழுது'' இதோ நான் ஆண்டவருக்கு அடிமை , உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக் கடவது என்று சொன்னாள். இந்த இரு சம்பவங்களில் இருந்து நமக்கு கிடைக்கிற பாடம், சந்தேகம் என்பது நம்முடைய வாழ்க்கையிலே வருவது நியாயமான ஒன்று. அதனால அந்த சந்தேகத்தை எப்படி வெளிப்படுத்துகிறோம், சந்தேகம் வருகின்ற நேரங்களிலே நம்முடைய விசுவாசத்தை எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பது தேவனாலே கவனிக்கப்படுகிறது.

இதை நாம், தோமாவுடைய சம்பவத்தோடு ஒப்பிடும் பொழுது, அங்கே இயேசு கிறிஸ்து தோமாவை கண்டிக்கவில்லை என்பதை நாம் கவனிக்கிறோம். மாறாக, தோமா விரும்பியபடி அவனுடைய சந்தேகம் தீரும் வகையிலே இயேசு கிறிஸ்து தோமாவுக்கு தன்னை வெளிப்படுத்தினார்.அப்படியானால் அவனுக்குள்ளாக இருந்த அந்த சந்தேகம், அவனுடைய குணாதிசயத்தின் வெளிப்பாடாக இருந்திருக்க வேண்டும். கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்று அவன் சொல்லவில்லை. அதை நான் நம்புவதற்கு நான் பார்க்க வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தின் வெளிப்பாடாக அது இருந்திருக்க வேண்டும். இதைவிட முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம், இயேசு கிறிஸ்து தன்னுடைய காரியத்தை

தோமாவுக்கு வெளிப்படுத்த ஆயத்தமான போது, அவன் தன்னுடைய சந்தேகத்தை உறுதி செய்யும்படியாக காயங்களை தொட்டுப் பார்க்கவில்லை. மாறாக, என் ஆண்டவரே! என் தேவனே !என்றான். இந்த அறிக்கை, பேதுரு செய்த அறிக்கையை காட்டிலும் பெரியது. பேதுரு இயேசுவை என் **ஜீவன் உள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து** என்றான்.

இங்கே தோமாவோ, இயேசுவை என் **தேவனே** என்றான். அதைத்தொடர்ந்து, பரிசுத்த ஆவியின் வருகைக்காக, இயேசு கட்டளை இட்டபடியாக, மற்ற சீஷர்களோடு தோமாவும் காத்திருந்தான் (அப்போஸ்தலர் 1:13). தோமா, தனக்கிருந்த சந்தேகத்தினாலே பாதிக்கப்படாமல், அந்த சந்தேகம் தன்னை மேற்கொள்ள விடாமல், தனக்கு இருந்த சந்தேகத்தை அவன் மேற்கொண்டு, தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி, கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற தன்னை ஒப்புக்கொடுத்தான். வரலாறு சொல்கிறது, இந்திய நாட்டிற்கு முதல் முதலாக சுவிசேஷத்தை கொண்டு வந்தது தோமா என்று. எனவே, நாம் தோமாவினுடைய சம்பவங்களிலிருந்து தெரிந்து கொள்வது, **நம்முடைய சந்தேகம், எந்த எண்ண ஓட்டத்தின் அடிப்படையில் வருகிறது என்பது முக்கியம் என்றும், சந்தேகம் வரும் பொழுது அதை நாம் எப்படி வெளிப்படுத்துகிறோம் என்பதும், சந்தேகமும் அதன் விளைவுகளும் நம்மை மேற்கொள்ள விடாமல், அவைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்** என்கிற முக்கியமான பாடத்தையும் நாம் கற்றுக் கொள்கிறோம். தோமாவை போல, இயேசுவுக்காக துணிச்சலோடும், உபதேச காரியங்களில் பகுத்தறிவோடும், இயேசுவுக்காக அர்ப்பணிப்போடும் நாம் இருந்து செயல்பட தேவன் நமக்கு கிருபை செய்வாராக. ஆமென்.

✞

## *நமது தேவன் நம்மை*

| | | | |
|---|---|---|---|
| *தப்புவித்தார்* | - | *சங்கீதம்* | *116:8* |
| *தப்புவிக்கிறார்* | - | *சங்கீதம்* | *107:20* |
| *தப்புவிப்பார்* | - | *சங்கீதம்* | *91:3* |
| *விடுவித்தார்* | - | *சங்கீதம்* | *18:17* |
| *விடுவிக்கிறார்* | - | *சங்கீதம்* | *107:28* |
| *விடுவிப்பார்* | - | *சங்கீதம்* | *37:39-40* |

சிறுவர் பகுதி

# ஒரு நல்ல நண்பர்

Dr.பிரெய்ஸி

**ஹெ**லோ குழந்தைகளே! தொடர்ந்து கட்டுரையை நீங்கள் அனைவரும் படிப்பீர்கள் என்று நம்புகிறோம்.இம்மாதம் இயேசுவின் அற்புதங்களள் ஒன்றிலிருந்து சில காரியங்களை கற்றுக்கொள்வோம்.

மாற்கு 2:1–12 ல் நான்கு நண்பர்கள் திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அந்த மனிதனைக் குணப்படுத்தினார் என்பது நமக்குத் தெரியும். நீங்கள் அனைவரும் இப்போது அந்த நான்கு நண்பர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் தங்கள் நண்பரை உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் குணப்படுத்திய இயேசுவிடம் அழைத்துச் செல்ல தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தனர்.

உங்கள் அனைவருக்கும் நண்பர்கள் இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்.உங்களில் எத்தனை பேர் உங்கள் நண்பர்களை தேவனிடம் நெருங்க வைக்க முயற்சிக்கிறீர்கள்? உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. எனவே, நீங்கள் அனைவரும் மற்றவர்களுக்கு நல்லவர்களாக இருங்கள் அவர்களை தேவனிடம் அழைத்துச் செல்லுங்கள். நான்கு நண்பர்கள் தங்கள் நண்பருக்கு சிறந்ததைச் செய்ததைப் போல, உங்கள் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களால் உங்கள் நண்பர்களை தேவனிடம் கொண்டு வர முயற்சியுங்கள்.

God bless
With lots of love
Praisey akka

✝

**பி**ள்ளைகளே, தினந்தோறும் வேதம் வாசித்து, ஜெபிக்க நேரம் ஒதுக்குங்கள். ஆசீர்வதிக்கப்படுவீர்கள்!

# நாளை நாளை என்று தள்ளிப் போடலாமா?

## சகோ. பென்னி மார்ட்டின்

அருமையான திருமறை ஆசான் வாசகர்களே,உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையின் பல சந்தர்ப்பங்களில் நாம் செய்ய வேண்டிய காரியங்களை நாளை, நாளை என்று தள்ளிப்போடுகிறோம். பிறகு நாளை என்பது நமக்கு கிடைக்காமலேயே போய், காரியங்களை நாம் செய்யாமலேயே நேரத்தை கடந்து விடுகிறோம். அல்லது கண் மூடி கண் விழிப்பதற்குள் வருடங்கள் உருண்டோடி விடுகின்றன. ஆக, நாம் செய்ய நினைத்த காரியங்களைத் தள்ளிப் போடுவதினால் பின்பு வாய்ப்பு கிடைக்காமலே போய் நம் வாழ்க்கையில் கைநழுவிப் போனகாரியங்கள் பல பல. அன்பானவர்களே, நம்முடைய கைகளில் இல்லை. காலங்களை தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தேவனுடைய கைகளில் தான் இருக்கிறது [யாக்கோபு4:14]. எனவே தான் நாம் காலத்தின் அருமையை உணர்ந்தவர்களாய் அதை பிரயோஜனப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று தேவனால் எச்சரிக்கப்படுகிறோம். [எபேசியர்5:16]. சிலரைப் பற்றி நாம் பார்க்கும்போது இவ்வுலகத்திற்குரிய வேலைகளைத் தள்ளிப் போடாமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். ஆனால் ஆவிக்குரிய காரி யங்கள் என்று வரும்போது தள்ளிப் போடுவதில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய சிந்தை என்பது துளி கூட இருக்காது. மாறாக, இவர்கள் மாம்ச சிந்தையால் நிரப்பப்பட்டவர்களாக இருப்பார்கள். ஆனால், தள்ளிப் போடுவதில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால், நாம் உலகத்திற்குரிய காரியங்களை தள்ளிப் போடுவதினால் தற்காலிகமாக நமக்கு இழப்பு ஏற்படும். ஆனால், ஆவிக்குரிய காரியங்களில் நாம் காரியங்களை தள்ளிப் போட்டால் அது நமக்கு நித்திய பாதிப்பை ஏற்படுத்தும். அதற்காக நாம் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியதாயிருக்கும். வேதாகமத்தில் இதற்கு மிகச்சிறந்த உதாரணம் தேசாதிபதியாக இருந்த பேலிக்ஸ் என்பவன்தான். சில நாளைக்குப்பின்பு பே லிக்ஸ் யூத ஸதிரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து, பவுலை அழைப்பித் து, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக் கேட்டான்.

அவன் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான் [அப்போஸ்தலர் 24:24,25]. வேறுவிதமாகச் சொன்னால் பேலிக்ஸ் மனம் திரும்பி தேவனுடைய காரியங்களில் ஈடுபட வந்தபோது அதை தள்ளிப் போட்டான். அதற்குப் பின்பு

மறுபடியும் அந்த வாய்ப்பு அவனுக்கு வரவே இல்லை. அதன் பின்பு சில காலத்திற்குள்ளேயே அவன் சிங்காசனத்தில் இருந்து தள்ளப்பட்டான். இது நமக்கு கர்த்தருடைய காரியங்களில் தள்ளி போடுதல் கூடாது என்பதை படிப்பிக்கிறது. இப்போது நாம் தள்ளிப் போடுதல் கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று பார்ப் போம்.

**தள்ளிப் போடுதல் பிசாசின் மாபெரும் ஆயுதமாகும்.**

தேவன் மோசேயை தன்னுடைய ஜனங்களை வழி நடத்தும் படி அழைத்தபோது, அவர் பல சாக்கு போக்குகளைச் சொல்லி தப்பித்துக் கொள்ளமுயற்சித்தார். ஆனால், தேவன் அவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் தம்டைய ஜனங்களை வழிநடத்த வைத்தார் என்பதை நாம் அறிந்திருந்தாலும், இதை நாம் அப்படியே சபையில் பொருத்திப் பார்க்க முடியும். சபை யில் சுவிசேஷத்தை பிறருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அங்கத்தினர்கள் அப்படிச் செய்யாமல் இருப்பதற்குச் சொல்லும் சாக்கு போக்குகள் தள்ளிப் போடும் செயல்களாகத் தான் இருக்கின்றன. சாத்தான் தள்ளிப் போடுதலை எடுத்து பயன்படுத்தி நம் ஆவிக்குரிய வாழ்வில் பெரு த்த சேதத்தை ஏற்படுத்தி விடுகிறான். அவன் சிறியோர் முதல் பெரியோர் வரை அதாவது, நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் தள்ளிப் போடுதல் அல்லது ஒத்தி வைத்தலைப் புகுத்தி விடுகிறான்.

உதாரணமாக, ஒரு 12 வயது சிறுவன் கர்த்தருடைய காரியங்களில் ஈடுபடாமல் இருக்க அதைத் தள்ளிப் போட நான் தேவனை பற்றி சிந்திக்க மிகவும் சிறியவனாய் இருக்கிறேன் என்பான்.

ஒரு 25 வயது வாலிபன் என் வாழ்க்கை உலகப் பிரகாரமான காரியங்களில் பரபரப்பாக இருக் கிறபடியால் தேவனைப் பற்றி சிந்திக்க எனக்கு நேரமில்லை என்பான்.

இப்படி எல்லா வயதினரும் தேவனுக்கு அடுத்த காரியங்களில் ஈடுபடாமல் இருக்க அவர்கள் மத்தியில் சாத்தான் தள்ளிப் போடுதல் அல்லது ஒத்தி வைத்தலை புகுத்தி விடுகிறான். பிரியமானவர்களே, சிலர் வாழ்க்கை சம்மந்தமான காரியங்கள் என்று வரும்போது அவை கண்ணும் க ருத்துமாக செய்வார்கள். உதாரணமாக, வேலை என்று வரும்போது சரியான நேரத்திற்கு செல்வார்கள், பிள்ளைகளை சரியான நேரத்திற்கு பள்ளிக்கு அனுப்புவார்கள். குடும்ப நிகழ்ச்சிகளில் ஒன்றைக் கூட விட்டுவிடாமல் எல்லாவற்றிலும் பங்கேற்பார்கள். ஆனால் ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும்போது அதை இப்போதே செய்யாமல் நாளை நாளை என்று நாட்களை நகர்த்தி கடைசி வரை அதைச் செய்து முடிக்காமலேயே காலத்தை கழித்து விடுவார்கள்.

**தள்ளிப் போடுதலை மேற்கொள்ள ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும்.**

பிரியமானவர்களே, தேவனுடைய காரியங்களை நாம் தள்ளி வைத்து பிறகு செய்யலாம் என்று நினைத்து கடைசியில் செய்ய முடியாமல் போவதால் இவ்வுலகத்திலும் அதற்கான விலையை கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அதைவிட மேலாக, வரவிருக்கும் உலகிலும் நாம் நித்திய ஜீவனை இழந்து போக வேண்டியதாயிருக்கும். அது நமக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு! எவ்வளவு பெரிய இழப்பு! சரி நாம் இதிலிருந்து எப்படி விடுபட முடியும்? நிச்சயமாக அதற்கு வழி உண்டு. நாம் ஆவிக்குரிய சிந்தை உடையவர்களாக இருந்து, ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும். மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதான முமாம் என்று நாம் (ரோமர்8:6)ல் வாசிக்கிறோம்.

இப்படி ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதைத் தான் ஆவிக்குரிய உடற்பயிற்சி என்று சொல்லுகிறோம். இந்த உடற்பயிற்சியில் ஈடுபட நமக்கு நல்ல ஆவிக்குரிய போஷாக்கு அவசியப்படுகிறது. அனுதினமும் நாம் அநேக முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவு எடுப்பதில் நம்மை வழி நடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதைப்போல் நாம் அனுதினமும் பலவிதமான சோதனைகளை, சவால்களை சந்திக்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட நாம் பலனற்றுப் போகும்போது உலகத்தாரிடம் உதவி கேட்கிறோம். ஆனால், அவர்கள் நம்மிடம் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப் போகிற அளவுக்கு செய்து விடுகிறார்கள். இவ்வுலகின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் போதுமான அளவு நமக்கு ஆசுவாசத்தை தரவே தராது. கலப்படம் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த் தை மாத்திரமே மாசற்ற கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும் போது அது கசப்பான நம் வாழ்வை இனிமையான வாழ்வாக மாற்றும். அதே நேரத்தில் நாம் உட்கொண்டவைகளை தேவனுக்கு பிரியமாக அப்பியாசப்படுத்தவில் லை என்றால் அது நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பிரியமான வாசகர்களே! நம் வாழ்க்கை கொஞ்ச காலம் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையை போல் இருக்கிறபடியால், வாழ்கின்ற கொஞ்ச நாட்களில் தேவனுக்கு பிரியமாக வாழ்ந்து, தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்வோம். நாம் தேவனுடைய காரியங்களை தள்ளிப் போட்டால் அவர் நம்முடைய காரியங்களை தள்ளிப் போட்டு நம்மை தவிக்க வைத்து விடுவார். எனவே, நாம் தள்ளிப் போடுதல் என்னும் பாவத்தில் தடுக்கி விழுந்து விடாமல் நம்மை நாம் காத்துக் கொள்வோம். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென்.

✝

# தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறதே!

Bro. பாண்டியன்

எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையுடைய ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானமும், வாழ்த்துக்களும் உண்டாவதாக. நியாயப் பிரமாணத்தை பின்பற்ற விரும்புகிறவர்களைப் பார்த்துப் பவுல் சொல்வது **எழுதியிருக்கிறபடி தேவனுடைய நாமம் புரஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே...** (ரோமர்2:24) என கடிந்து கொள்கிறார். இதைப் பற்றி பேசும் முன்பு நாம் ஆராதிக்கும் தேவனுடைய நாமம் எப்படிப்பட்ட மேன்மை உள்ளது என்று கவனிப்போம்.

சாராளிடம் கோபித்துக் கொண்டு புறப்பட்டுச் சென்ற ஆகார் பாலைவனத்தில் ஒரு அனாதையைப் போல ஒரு நீரூற்றண்டையில் உட்கார்ந்திருந்தாள். கர்ப்பவதியாய் இருக்கும் தன்னை கவனிக்கவும், அன்பு செலுத்தவும் ஒருவரும் இல்லை என்ற மனச்சோர்வு அவளிடமிருந்தது. அப்போது கர்த்தருடைய தூதனானவர் அவளைச் சந்தித்து தைரியப்படுத்தி, உன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும் என்று தேற்றினார். மனம் நொந்து போயிருந்த ஆகார் இதைக் கேட்டவுடன் தன்னைத் தேற்றிக்கொண்டு, தன்னோடே பேசினக் கர்த்தருக்கு **நீர் என்னைக் காண்கிற தேவன்** (ஆதி.16:13) என்று பேரிட்டாள். நம்மில் சிலர் நம்முடையக் கஷ்டங்களைச் சொல்லி அழக் கூட ஒருவரும் இல்லையே என்று வருத்தப்படுமளவு சில சூழ்நிலைகளை சந்திக்கலாம். ஆனால், நம்மை விசாரிக்கிற தேவன் ஒருவர் உண்டு என்பதை மறவாதே (1பேதுரு 5:7).

தேவன் சொன்னபடி தன் மகனை பலியிடச் சென்றபோது **ஆபிரகாம் தன் மனதில் நான் என் மகனை பலி செலுத்தினாலும் தேவன் அவனை உயிரடையச் செய்வார்** என்ற விசுவாசம் அவனுக்கு இருந்ததாக எபிரெயர் ஆசிரியர் சொல்வது (எபி.11:18) நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது! அதே வண்ணம் அவன் துணிந்தபோது தேவன் அவனைத் தடுத்துப் பாராட்டின பின்பு, ஒரு ஆட்டைக் காண்பித்து பலியிடச் செய்தார். அப்போது அந்த இடத்திற்கு ஆபிரகாம் **யேகோவாயீரே** என பெயரிட்டான். அதற்குக் **கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும்** என்று அர்த்தமாம் (ஆதி.22:14). வேதாகமத்தில்

சபையைப் பற்றின தீர்க்கதரிசனத்தில் கர்த்தருடைய பர்வதம் என்பது சபையை அடையாளப்படுத்துகிறது (ஏசா.2:2,3). ஆகவே, இரட்சிக்கப்பட்டு சபையிலிருக்கிற நம் தேவைகளை தேவன் நிச்சயம் சந்திப்பார் என்பதே நாம் கொள்ள வேண்டிய விசுவாசமாகும்.

தேவனுடைய ஆசீர்வாதத்தினால் பெரிய ஐசுவரியவானாக மாறிய ஈசாக்கை அவன் எதிரிகள் பொறாமைக் கொண்டு தொல்லைக் கொடுத்தனர். ஈசாக்கு பொறுமையோடே அவர்களை விட்டு விலகிச் சென்ற போது ஒரு நல்ல இடம் அவனுக்கும், அவனைச் சார்ந்தவர்களுக்கும் தேவன் வாய்க்கச் செய்தார். அப்போது ஈசாக்கு, **தேசத்தில் நாம் பலுகிப் பெருக தேவன் நமக்கு இடமுண்டாக்கினார்** என்று சொல்லி அதற்கு **ரெகொபோத்** என்று பேரிட்டான். அதைப்போல நமக்குப் பிரச்சனைகள், பகைகள் வரும்போது ஈசாக்கின் தேவன் நமக்குத் துணை செய்வார் என்ற நம்பிக்கையோடே இருப்போம்.

இஸ்ரவேலரிடம் மோசே அனுப்பப்பட்டபோது - **இருக்கிறவராகவே இருக்கிறேன்** என்று அர்த்தங் கொள்ளும். **யேகோவா** என்ற தேவ நாமம் வெளிப்பட்டது. பிற்பாடு ஜனங்கள் அமலேத்தியரோடே போரிட்டு வென்ற இடத்தில் மோசே பலிபீடம் கட்டி **யேகோவா நிசி** என்று அதற்கு பேரிட்டான். நியாயாதிபதிகளின் காலத்தில் கிதியோனும் ஒரு பலிபீடம் கட்டி சமாதானத்தின் தேவன் என்ற அர்த்தம் கொள்ளும் **யேகோவா ஷாலோம்** என்று பேரிட்டான். தேவனுடைய பெட்டி யுத்தத்தில் வந்த போது கூட பெலிஸ்தர் தேவ நாமத்தைப் பற்றி பயந்து அலறினர் (1 சாமு.4:7).

இப்படிப்பட்ட மகத்துவமுள்ள நாமத்தின் மகிமையைத் தான் தேவன், சிலுவையில் வெற்றிச் சிறந்த தன் குமாரனுக்கு தந்து, இயேசுவின் நாமத்தில் முழங்கால்யாவும் பிதாவுக்கு முன்பாக முடங்கும் படிக்கு (ஏசா.45:23) மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்(பிலி2:8-11). ஆகவே, தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக் கூடாது என்பது பத்துக் கட்டளைகளில் ஒன்றாகும்(யாத்.20:7). எப்படியெனில், அவர் நாமத்தைக் கொண்டு பொய்யாணை இடுதல், தரித்திரப்படுகிறதினால் திருடும்போதும், தகுதியில்லாத பலிகளைச் செலுத்தும் போதும் தேவனுடைய நாமம் வீணிலே வழங்கப்படுகிறது. நாமும் ஆராதனையின் ஐந்து படிகளில் குறை வைத்தால் தேவனுடைய நாமம் வீணிலே வழங்கப்படும் என்பதை மறக்கக்கூடாது.

மெய்யான தேவனை தெய்வமாகக் கொண்ட இஸ்ரவேலர் அந்நிய தேவர்களை வணங்கி அவருக்கு எரிச்சல் மூட்டினார்கள். எசேக்கியா ராஜா காலத்தில் எதிரிகள் தேவனை தூஷித்தபோது, நீ யாரை நிந்தித்து தூஷித்தாய் ? என்றுக் கடிந்து அவர்களை தேவன் அழித்தார்(ஏசா.37:23) மேலும், சிறைப்பிடிப்பில் இஸ்ரவேலர் சித்திரவதை அனுபவித்த போது **என் நாமம் தூஷிக்கப்படுகிறது** என தேவன் வருத்தப்பட்டார்(ஏசா.52:5)

இப்போது சபையில் இருக்கும் நாம் தவறு செய்யும் போது தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது (1 பேதுரு3:16-4:14) அதனால் தான் பவுல் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றுச் செய்யுங்கள் என்கிறார். (1கொரி.10:30,31) மட்டுமல்ல, வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழைக்கும் கள்ளப் போதகர்களால் தேவனுடைய சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது(2 பேதுரு 2:2)

இளம் மனைவிகள் தங்கள் சொந்த புருஷர், பிள்ளைகளிடத்தில் அன்பு செலுத்தாமல் வேறுபட்டு நடக்கும் போது தேவ வசனம் தூஷிக்கப்படும் என பவுல் எச்சரிக்கிறார்(1 தீமோ.2:10) புறஜாதியார் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்த வேண்டும் (1 பேதுரு 2:12). ஆதலால், எனக்கன்பான தேவப் பிள்ளைகளே உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். தேவனே உங்களில் தம் சித்தப்படி விருப்பத்தையும், செய்கையையும் உண்டாக்குகிறார் (பிலி.2:12,13). தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**நாம் போராட வேண்டும்? எவைகளுடன்**

1. பிசாசுடன் (அந்தகார லோகாதிபதி) - எபே.6:12
2. பாவத்திற்கு எதிராக - எபி.12:4
3. உலக மனிதர்களுடன் - ஏசா.41:12, 1கொரி.15:32
4. மாம்சத்தோடு -எபே.6:12
5. விசுவாசத்திற்காக - யூதா.3,1தீமோ.6:12,பிலி.1:27
6. ஜெபத்தில் - கொலே.4:12

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

## பொய்யான மனித சபை

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.

நம்முடைய பிதாவாகிய தேவன், தம் குமாரரும், நமது ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவைக்கொண்டு சபையாகிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கு படி திட்டமிட்டார். ஆனால், மனிதர்கள் சுமார் கி. பி. 4 ம் நூற்றாண்டு முதல் பொய்யான மனித சபைகளை உண்டாக்கினார்கள். அதைப்பற்றி இந்தக் கட்டுரையில் படிப்போம்:

A. கி. பி. 33 ல் இயேசு கிறிஸ்து தம் மரணம் அடக்கம் உயிர்தெழுதலாகிய சுவிசேஷத்தினாலும் பரலோக பலியினாலும் தம்முடைய மெய்யான கிறிஸ்துவின் சபையை அல்லது பரலோக ராஜ்யத்தை கி. பி. 33 ல் பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபித்தார். கிறிஸ்து ஆவிக்குரிய சரீரத்தோடு பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்ததால், அவருடைய சார்பாக அவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எருசலேமிலே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். சபை ஸ்தாபிக்கப்பட்டு அதில் கிறிஸ்துவின் உபதேசம் மட்டுமே பிரசங்கிக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டு முறைமை மட்டுமே கைக்கொள்ளப்பட்டது.

B. ஆனால் மனிதர் தங்கள் சொந்த இஷ்டமாக வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு கோட்பாடுகளில் உபதேசங்களில் சபைகளை ஸ்தாபித்தார்கள். இவைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாத மனித சபைகள் ஆகும். அவைகளைப் பற்றி பார்ப்போம்:

1). கி.பி. 325 ல் நிசியா சங்கம் தன்னாட்சியான சபைகளை (The Autonomous Churches) ஒரு சர்வதேச இராஜ்யமாக மறுசீரமைத்தது. பேரரசன் கான்ஸ்டன்டைன் சர்வதேச ராஜ்யமான சபையின் எழுதப்படாத மறைமுகமான தலைவராக இருந்தான். சில ஆயர்கள், பேராயர்கள் என பல சபைகளின்மேல் ஆட்சி செய்தனர். இந்த சங்கத்தின் மூலமாக ஆயர்கள் மனித சட்டங்களை உருவாக்கி அதிகதிகமான சபைகளை கட்டுப்படுத்த வழி தேடினார்கள். உபதேசங்களையும் மாற்றிக் கொண்டார்கள்.

**2). கிபி 345 முதல் கிபி 825 வரை நிகழ்வுகள்:**

அப்போஸ்தலனாகிய தோமா கி. பி. 52 ல் தென்னிந்தியாவிற்கு வந்தார் என்று மார்த்தோமா சபையார் கூறுகிறார்கள். ஆனால், அவர்களின் இந்தக் கூற்றை உறுதிப்படுத்த அத்தாட்சிகள் இல்லை. ஒரு பாரம்பரியத்தின் பிரகாரம் பெர்சியா தேசத்திலிருந்து 400 பேர் கொண்ட குழு இப்பொழுது இருக்கிற கேரளாவின் மலபார்

தீவிற்கு வந்தார்கள். அவர்கள் ஒரு வியாபாரியின் தலைமையின்கீழ் கி.பி 345 ல் வந்தார்கள். அவனுடைய பெயர் கானாவின் தோமா அல்லது கனேகொமன் என்று அழைக்கப்படும். பெர்சியா தேசத்திலிருந்து ஒரு குடியேற்றம் பெர்சியா வியாபாரி மார்வான் சப்ரிஷோ என்பவன் தலைமையின் கீழ் இரண்டு ஆயர்கள், Mar Sapro and Mar Prodh வோடு கி.பி. 825 ஆம் ஆண்டில் வந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டது. அவர்கள் கேரளாவின் குயிலன் என்ற இடத்தில் கப்பலில் வந்து இறங்கினார்கள். மன்னர் சேரமான் பெருமாள் அவர்களுக்கு நிலம் அளித்து அவர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்கினார்,

அது இரண்டு செப்புத் தகடுகளில் (மலையாளத்தில் செப்பட்) பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மூன்று செப்புத்தகடுகள் கோட்டயத்தில் உள்ள பழைய செமினரியிலும், இரண்டு திருவல்லாவில் உள்ள மார்தோமா சபை தலைமையகத்திலும் உள்ளன. (https://marthoma.in/the&church/heritage/). ஒரு சபை அந்த காலத்தில் இருந்தது என்பதற்கு மேலே குறிப்பிடப்பட்ட செப்புத்தகடுகள் அத்தாட்சியாயிருக்கிறது. ஆயினும், அவர்களுடைய பழங்காலத்தின் பழக்கங்களும் உபதேசங்களும் நமக்குத் தெரியாது. ஏனென்றால், இந்த சபை காலங்காலமாக தன்னுடைய நிலைப்பாட்டை அதிகம் மாற்றிக்கொண்டது. அதே நேரத்தில் ஒரு சபை அங்கு செயல்பட்டது என்பதற்கு இது ஒரு தெளிவான சான்றாகும். இருப்பினும், அவர்களின் பழங்கால கோட்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றி நமக்கு தெரியாது. இந்த சபை காலப்போக்கில் பெரிதும் மாறிவிட்டது. கானாவின் தாமஸ் என்ற வணிகரின் தலைமையில் மலபார் வந்தடைந்ததாக ஒரு மரபு உள்ளது. மார்வான் சப்ரிசோ என்ற பாரசீக வணிகரின் தலைமையில் மார்சப்ரோ மற்றும் மார்ப்ரோத் என்ற இரண்டு ஆயர்களுடன் பெர்சியாவிலிருந்து மற்றொரு குடியேற்றம் வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. கி.பி. 432 ல் பேட்ரிக் (Patrick) என்பவனால் அயர்லாந்தின் சபை (The Church of Ireland) தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆர்மாக் (Armagh) பட்டணத்தில் கி. பி 458 அல்லது 459 ல் ஒரு ஆயர் (Patrick's Synod) மாநாடு நடைபெற்றது, அப்போது ஐரிஷ் சபை (Irish Church) ஒழுங்காக அமைக்கப்பட்டு, St. பாட்ரிக்கின் தலைமை அர்மாக்கில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த கூட்டம் பேட்ரிக்கை அவர்களின் பூமிக்குரிய தலைவராக்கியது. ஆனாலும் நிசியா கவுன்சிலில் அமைக்கப்பட்ட சபையின் ஒரு பகுதியாக இந்த ஐரிஸ் சபை இருந்து, ரோம சாம்ராஜ்யத்தில் இருந்த சபை மற்ற சபைகளுக்கு வேறுபட்டதாக இருந்ததில்லை.

4. கி.பி 607 ல் முதல் போப்: கி.பி. 440–461 காலகட்டத்தில் ரோம பிஷப் லியோ 1 (Leo 1) என்பவன், தான்தான் – பேதுருவுக்கு பதிலாளி என்றும் மற்றும் அனைத்து சபையின் தலைவர் என்றும் தனக்குத் தானே விவாதித்தான். ஆனால், ரோமப் பேரரசன் அந்த உரிமையை அவனுக்குக் கொடுக்கவில்ல. கான்ஸ்டான்டிநோபிள் (Constantinople) பட்டணத்தின் ஆயர் அவனுக்கு சமமாக சாம்ராஜ்யம் செய்தான். சுமார் 146 ஆண்டுகளுக்குப் பிறகு, ஏறக்குறைய ஒரு வருடமாக ஆயரின் இடம் காலியாக இருந்த பிறகு, (கி. பி. 606 ல் ரோமில் ஒரு ஆயர் இல்லாத சூழ்நிலையில்) ரோம அரசன் Phocas என்பவன் 607 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ல் ரோமின் புதிய ஆயராக மூன்றாம் போனிஃபேஸை நியமித்தான். ரோமானிய அரசாங்கத்தின் ஏகாதிபத்திய ஆணை மூலம் ரோமஅரசன் போனிஃபேஸ் III (Boniface III) **அனைத்து சபைகளின் தலைவராகவும்** (Head of all the Churches) **உலகளாவிய ஆயராரகவும்** (Universal Bishop) என்று எழுதி பிரபலம் பண்ணினான். போகாஸ் **உலகளாவிய ஆயர்** என்கிற பட்டத்தை (தலைப்பை) கான்ஸ்டான்டினோபிள் பட்டணத்தின் மறைமாவட்டத்திலிருந்து ரோம் மறைமாவட்டத்திற்கு மாற்றினான். **ஆசீர்வதிக்கப்பட்ட அப். பேதுருவின் ஆசனம் அனைத்து சபைகளுக்கும் தலைமையாய் இருக்க வேண்டும்** என்றும் உலக ஆயர் ("Universal Bishop") என்கிற பெயர் ரோம பிஷப்பிற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும்படி வேறு ஆணை ஏற்படுத்தும்படி போனிஃபேஸ் என்பவன் ஃபோகாஸிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டான்.

(https://en.wikipedia.org/wiki/Historyofpapalprimacy) இந்த காலத்தில் ரோம ஆயரின் (பிஷப்பின்) தலைமை சொல்வதை விட பேரரசன் மறைமுகமாக சபைகளின் தலைவனாய் இருந்தான். கி.பி 800 இல் தான் ரோமானிய பிஷப் சார்லமேனை (Charlemagne) ராஜாவாக அபிஷேகம் செய்தான். அப்போது, பூமிக்குரிய ராஜக்களைவிட ரோமானிய ஆயர்கள் அதிக அதிகாரம் பெற்றிருந்தார்கள். இருப்பினும், சில நூற்றாண்டுகளாக சபையின் ஐக்கிய சங்கங்கள் (Ecumenical Councils) மிகவும் சக்திவாய்ந்தவையாக இருந்தன.

5. கி.பி. 1054 ல் ரோமன் கத்தோலிக் மற்றும் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபைகள் ஜூலை 16, 1054 அன்று பிரிக்கப்பட்டன. இதுவரை, ரோம ஆயர் கிழக்கு பிராந்திய சபைகளின்மேல் ஆட்சி செய்வதை கான்ஸ்டான்டி நோபிள் ஆயர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. சுருக்கமாக, எந்த பிஷப் அதிக அதிகாரம் செலுத்தினான் என்பதைக் குறித்தும், எந்த உபதேசத்தை உண்மை என்று யார் முடிவு செய்வான் என்கிற விவாதம் தொடர்ந்து

இருந்தது. இரண்டு சபைகள் **மாநில சபைகளாக** (State Churches) இருந்து, அவை மக்கள் மீது பெரும் அதிகாரத்தை செலுத்தியது.

6. கி. பி. 1525 ல் சுவிட்சர்லாந்தில் (Switzerland) தேசத்தில் அனாபாப்டிஸ்ட் சபைகள் (The Anabaptist Churches) புதிய ஏற்பாட்டு மாதிரிக்கு திரும்ப முயற்சித்தார்கள். எத்தனைபேர் தெளிக்கப்பட்ட குழந்தை ஞானஸ்நானம் பெற்றிருந்தார்களோ அவர்கள் அத்தனை பேருக்கும் முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அவர்கள் மனித ஆசாரியத்துவத்தையும் ரோமானிய சபைகளின் பெரும்பாலான சடங்குகளையும் தவிர்த்து விட்டார்கள். ஆனால், சில சடங்குகள் இன்னும் இருந்தது. இந்த மக்களுடைய சரித்திர புத்தகங்களை இவர்களுடைய எதிராளிகள் ஒழித்து விட்டார்கள்.

7. கி.பி. 1531 ல் மார்ட்டின் லூதர் (Martin Luther) என்பவன் போப்பின் பாவங்களை மன்னிக்கும் உரிமையை (The Pope's Right to Forgive Sins) நிராகரிக்கும்போது லூத்தரன் சபை தொடங்கியது. முன்பாகவே 1530களில் பல ஜெர்மானியர்கள் லூதரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர். இதனால் லூத்தரன் சபை 1531 இல் ஸ்தாபிக்கப்பட்டது. லூதர் ''**விசுவாசம் மட்டும்**'' போதும் என்று போதித்திருந்தாலும், அவர்கள் குழந்தைகளுக்கு தெளிப்பு ஞானஸ்நானம் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். லூத்தரன் இரட்சிப்புக்காக ஆசாரிய நற்கிரியைகளை நிராகரித்து **கிருபை மட்டும்** போதும் என்று போதித்தான். லூத்தரன் சபை இன்றும் டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்தின் **தேசிய சபையாக** இருக்கிறது.

8. கி.பி. 1534 ல் ராஜா எட்டாம் ஹென்றிக்கு (King Henry VIII), போப் விவாக ரத்து கொடுக்கவில்லை என்பதற்காக ராஜா எட்டாம் ஹென்றி ஆங்லிக்கன் சபையை (The Anglican Church) தொடங்கினான். கத்தோலிக்க போப்பை விட மன்னன் இங்கிலாந்து சபையின் தலைவனாக ஆனான். ஆங்கிலேய உயர் சபை கத்தோலிக்க சபையைப்போல அமைப்பும், கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டதாகவும் இருக்கிறது. அதே வேளையில் அதற்கு கீழான சபைகள் அதிகமான சடங்காச்சாரங்களைப் பயன்படுத்தவில்லை.

**தொடரும் :–** ✝

---

உலகத்தில் **சபை** என்ற பெயரில் காணப்படும் எல்லா அமைப்புகளும் தேவத் திட்டதின்படியானது என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள்.

# மணவாளியே !

## K.M. பிலிப். பவானி

கிறிஸ்துவுக்குள் அன்பான ஆசானின் வாசகர்கள் யாவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

வெளி.22:17ல் **ஆவியும் மணவாட்டியும் 'வா' என்கிறார்கள்** என்றும், 21:9ல்.... நீ இங்கே வா; ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்றும் எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிறோம். இதில் ஆவி என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது என்பதில் ஐயம் இல்லை. அதேபோல் ஆட்டுக்குட்டியானவரைக் குறித்து யோவான் ஸ்நானகன் **இதோ உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி** [யோவான் 1:29] என்றும் மீண்டும் 1:36ல் **இதோ தேவாட்டுக்குட்டி** என்றும் இருமுறை அழுத்தமாக சொல்வதன் மூலம் இயேசுக் கிறிஸ்துவே ஆட்டுக்குட்டியானவர் என்பது தெளிவாகிறது. அப்படியென்றால், மணவாட்டி என்பது யாரைக் குறிக்கிறது என்பதைப் பார்ப்போம். 2 கொரி.11:2ல் நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் என்று பவுல் கொரிந்து சபையாரை நோக்கி சொல்லுகிறார். மேலும், எபேசு சபைக்கு கணவன் மனைவி உறவை ஒப்பிட்டு எழுதும்பொழுது **கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்கு தலையாயிருக்கிறான் என்றும்** [எபே.5:23], **புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார்** என்றும் ஒப்பிட்டுச் சொல்லுவதில் கிறிஸ்துவாகிய மணவாளனுக்கு சபை மணவாட்டியாயிருக்கிறது என்பதை சரியாய் புரிந்து கொள்ள முடியும்.

மேலும், ஒரு மணவாளனுக்கு ஒரு மணவாட்டி என்பதே தேவனுடைய திட்டம்; இன்றைய தேச சட்டமும் அதுவே. இதை வேதம் பல இடங்களில் தெளிவு படுத்தியிருக்கிறது. ஒருமையில் சொல்லப்பட்ட சில வசனங்களை முன் வைக்கிறேன். **மணவாட்டியை உடையவனே மணவாளன் [யோவான்3:29]. நான் உங்களை கற்புள்ள கன்னியாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க நியமித்தபடியால்** [2 கொரி.11:2] என்பதிலும், **ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன்** [வெளி 21:9] என்பதிலும் **மணவாட்டி** என்று ஒருமையில் தான் வேதம் வெளிப்படுத்துகிறது. **கிறிஸ்துவம் சபையில் அன்பு கூர்ந்தார்** [எபே. 5:25]. என்பதும், **நான் என் சபையைக் கட்டுவேன்** [மத்.16:18] என்ற இயேசுவின் வார்த்தையிலும் ஒரே ஒரு சபை தான் என்பது திட்டம் தெளிவுமாக வேதம் கூறுகிறது. அந்த சபை கிறிஸ்துவால் கட்டப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் **கிறிஸ்துவின் சபை** [ரோமர் 16:16] என்று அடையாளப்படுத்தப்பட்ட ஒரே சபையாகும். இந்த ஒரே சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்ட நம்

அனைவருக்கும் வேதம் கொடுக்கும் தகுதிதான் **மணவாட்டி** என்பதாகும். பூமியிலே கன்னிகையாய் வாழ்ந்து கொண்டிருக்கிற நம்மைப் பரிசுத்தப்படுத்தி தனக்கேற்ற மணவாட்டியாய் நிச்சயித்துக் கொள்ளவே முதல்முறை தேவ குமாரனாய் இப்பூமிக்கு வந்தார் (பிலி.2:6,7). தன் விலையேறப்பட்ட இரத்தத்தாலே நம்மை மீட்டு (1 பேதுரு 1:19) தான் கட்டிய சபையிலே நம்மை அடைக்கலப் படுத்தியிருக்கிறார்(அப்.2:47). பரத்திற்கேறிச் சென்ற கிறிஸ்து, பிதாவின் சித்தத்தின்படி மீண்டும் வந்து மணவாட்டியாகிய சபையை தன்னோடு சேர்த்துக் கொண்டு பரமபிதாவிருக்கும் பரலோகத்திற்குள் பிரவேசிப்பார் (1 கொரி.15:24).

அன்பானவர்களே! மணவாளனின் மாசற்ற அன்பின் தியாகத்தால் மணவாட்டியாய் நிச்சயிக்கப்பட்டு, மணவாளனின் இரண்டாம் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிற நம்மிடம், அவருக்கேற்ற தகுதிகளை எதிர்பார்க்கிறார். இதை மணவாளன் விருப்பத்தோடு, பாசத்தோடு, நேசத்தோடு மணவாட்டியை அழைக்கும் இனிமையான சத்தத்திலிருந்தே புரிந்து கொள்வோம். மணவாளனின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்.

**முதல் அழைப்பு: என் சகோதரியே!(உன்.5:1)**

என் சகோதரியே! என்று பாசத்தோடு அழைக்கிறார். இது திகைப்பாயிருக்கிறதல்லவா! ஆனால் கிறிஸ்துவின் வருகை மட்டும் இதுவே உண்மை. எப்படியெனில், அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் (யோவான்1:12). இதன்படி தேவனுடைய ஒரே பேரான குமாரராகிய கிறிஸ்துவுக்கு நாம் சகோதரியே. ஆகவே, மணவாளன் நம்மை சகோதரியே என்று அழைக்கும் உரிமை அவருக்குண்டு. இது ஒரு இரத்த பிணைப்பு. இதில் சபையில் உள்ள எல்லாருமே ஒருவருக்கொருவர் சகோதர, சகோதரிகளே. இதில் வயது தவிர, சாஸ்திரி, முதலியார், நாடார், பிள்ளை என்ற பாகுபாடு காட்டுவது முற்றிலும் தவறானது. **பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவன் எனக்கு சகோதரனும், சகோதரியுமாயிருக்கிறார்கள்** (மத்.12:50) என்று இயேசு சுட்டிக் காட்டியிருக்கிறார். இதில் பிதாவின் சித்தம், இவர் என்னுடைய நேசகுமாரன் இவருக்குச் செவி கொடுங்கள் என்பதேயாகும். இதையே இயேசுவும் வலியுறுத்தி, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார் (மத்.28:20– லூக்.9:35). புதிய உடன்படிக்கையின்படி சபையில் இருக்கிறோம் வாரத்தின் தல் நாளில் சபை கூடி தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும். புதிய உடன்படிக்கையில் கட்டளையிடப்படாத பண்டிகைகளையும், ஓய்வு நாளையும், ஒழுங்கற்ற ஆராதனை முறைமைகளையும் அறவே அகற்றி விட வேண்டும். மேலும், **வசனத்தைக் கேட்டு அதன்படி**

**செய்கிறவர்களே எனக்கு சகோதரரும், சகோதரி களுமாயிருக்கிறார்கள்** (லூக்கா 8:21) என்று இயேசு வாய் திறந்து சொல்லியிருக்கிறார். அந்த வசனம், ''**தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூர வேண்டும்** என்பதை எடுத்துக் காட்டுகிறது (1 யோ. 4:21). ஆம், அன்பானவர்களே! நாம் ஒருவருக்கொருவர் மாயமற்ற அன்பு செலுத்தி; பகை, வெறுப்புகளுக்கு இடம் கொடாமல், சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருப்போம். ஒருவரையொருவர் கனம் பண்ணுவோம் (ரோமர் 12:9,10). இப்படி இருப்பது நாம் மென்மேலும் வளர (சபை வளர) பேருதவியாயிருக்கும். இப்படிப்பட்ட சகோதர சிநேகத்திற்குக் கிடைக்கும் பலன் – **நாம் அவருக்குப் பங்காளிகளாகிறோம். இதை இயேசுவே வெளிப்படுத்துவதை கேளுங்கள்....நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன்** (யோவான் 14:3) என்று வாக்களித்துள்ளார். வாக்கை நிறைவேற்றும் மணவாளன் வரும் வரை அவர் நம்மை ''**என் சகோதரியே!** என்று அழைக்கும்படி தகுதியாய் வாழ்வோம்.

**2–வது அழைப்பு: என் மணவாளியே!** (**உன்.5:1**)

மணவாட்டிகளே! அல்ல என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருமுறையல்ல 6 முறை **மணவாட்டியே** என்று ஒருமையில் தான் அழைக்கிறார். அதிலும் **என் மணவாட்டியே!** என்று உரிமை கொண்டாடுகிறார். ஆம், நாம் கிறிஸ்துவுக்கு மட்டுமே உரியவர்கள். ஆகவே, ''குமாரத்தியே கேள். உன் ஜனத்தையும், உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு (சங். 45:10). அதாவது, தேவனற்ற உறவுகளை உதறிவிடு. அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியம் இல்லை. கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும் இசைவில்லை. அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கில்லை ( 2 கொரி. 6:14–17). தனக்கு என்ன நேரிட்டாலும் தேவ ஜனத்தோடு தன்னை இணைத்துக் கொண்ட ரூத் **உம்முடைய ஜனம், என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று** உறுதியாய் சொன்னது போல, சபையோடு இணைக்கப்பட்ட நாம் மணவாளனாகிய கிறிஸ்துவோடு ஓரே சரீரமாக இணைத்துக் கொண்ட உறவில் உறுதியாயிருப்போம். தேவனுடைய கற்பனையான நீதியின் மெல்லிய வஸ்திரத்தால் எப்பொழுதும் நம்மை அலங்கரித்துக் கொண்டு மணவாளன் வருகைக்காக ஆயத்தமாயிருப்போம் ( சங்.119:172; வெளி. 19:7,8). நம் நீதி மணவாளனை திருப்தி செய்யட்டும். **என் மணவாளியே! என்று அழைக்கும் மணவாளனைக் குறித்து, என் நேசர் என்னுடையவர்; நான் அவருடையவள்** (உன். 2:16) என்ற திருப்தியான வாழ்க்கை வாழ்ந்திருப்போம்.

**3வது அழைப்பு: என் பிரியமே!** (**உன். 7:6**).

மனமகிழ்ச்சியை உண்டாக்கும் என் பிரியமே! என்று நேசத்தோடு அழைக்கிறார். ஆம் மணவாட்டியின் நடைமுறை வாழ்க்கை

மணவாளனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியுள்ளது. ஆகவே **என் பிரியமே!** என்று அழைக்கிறார். அதுதான், **நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மை குறித்து சாட்சி கொடுத்த போது மிகவும் சந்தோஷப்பட்டேன் என்கிறார்** (3 யோவான்3,4). ஆகவே, சத்தியத்தோடு ஒன்றையும் கூட்டி, குறைத்து, மிஞ்சி எண்ணி செயல்படுவது மணவாளனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்காது என்பதை புரிந்து செயல்படுவோம். செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம் (நீதி. 15:8). சபையில், குடும்பத்தில், தனிப்பட்ட நிலையில், ஜெபிக்க வேண்டும். எல்லா மனுஷருக்காகவும், ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளவர்களுக்காகவும், சபை வளர்ச்சிக்காகவும் ஜெபிக்க வேண்டும். இது தேவனுக்கு முன்பாக நன்மையும் பிரியமானதுமாகும் (1 தீ.2:1-3). சபையைக் கட்டும்பொழுதும் (ஆகாய் 1:3), தேவனுக்கென்று உற்சாகமாய் கொடுக்கும்பொழுதும் மணவாளன் பிரியப்படுகிறார். இப்படி மணவாளனுக்கு எது பிரியம் என்று வேதத்தில் தேடித் தேடி அதன்படி நடந்து அவரைப் பிரியப்படுத்தினால், நாம் வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்வோம் (1 யோவான் 3:22). பிரியமானவ(னே)ளே! நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்று அவருடைய வாழ்த்துதலையும் பெறுவோம்.

**4வது அழைப்பு: என் புறாவே (உன். 2:14)**

மணவாளன் மணவாட்டியை **என் புறாவே!** என்று பெருமையாய் அழைக்கிறார். புறாவைக் குறித்து இயேசு, **புறாவைப் போல கபடற்றவர்களாய் இருங்கள்** என்று சாட்சி பகிர்கிறார் (மத். 10:16). சொல் ஒன்றும் செயல் வேறொன்றுமான மாய்மாலம் செய்த பரிசேயர், வேத பாரகரைப் பார்த்து இயேசு, ''ஐயோ'' என்கிறார், யூதாசும், அனனியா, சப்பிராளும் வாழ்க்கையில் மாய்மாலம் செய்ததால் **ஐயோ!** என்ற சாபத்துக்காளானார்கள். நாம் எல்லாக் கபடும் நிறைந்த பிசாசின் பிள்ளைகளல்ல (அப். 13:10). கபடில்லாமல் திவ்விய உண்மையோடு கைகளில் சுத்தமுள்ளவர்களாய், மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலிருந்து (சங். 24:4, 3) கர்த்தருடைய பர்வதத்தில் மணவாளனோடு ஏற வேண்டியவர்கள். அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருக்க வேண்டியவர்கள். அது மட்டுமல்ல, இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறும் பொழுது, **ஆவியானவர், புறாவைப் போல இறங்கி தம்மேல் வருகிறதைக்கண்டார்** என்பதில் (மத். 3:16) வேதம் புறாவை பரிசுத்த ஆவியானவரோடு இணைத்து சொல்வதைப் பார்க்கிறோம். பிரியமானவர்களே! மணவாளன் நம்மை **என் புறாவே!** என்று பாராட்டுகிறாரென்றால், நம் பரிசுத்த வாழ்க்கை குறித்து கவனமாய், கருத்தாய், ஞானமாய் செயல்படுவோம். நாம் தேவ சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாயிருப்போம் (வெளி. 14:5).

**5வது அழைப்பு: என் உத்தமியே! (உன். 5:2).**

**என் உத்தமியே!** என்று பாராட்டுகிறார். இதைத்தான் பவுல் கொரிந்து சபையாரைக் குறித்து, நான் உங்களை கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தேன் என்று பாராட்டுகிறார் (2 கொரி. 11:2). தேவ சாயலாகப் படைக்கப்பட்ட நாம் அதைக் காத்துக்கொள்ள ஞானஸ்நானத்தின் மூலம் ஒப்புக்கொடுத்திருக்கிறோம். அதில் உண்மையாய் நிலைத்திருப்போம். நம் சொல், செயல், சிந்தனையில் உத்தமமிருக்க வேண்டும். நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் மணவாளனாகிய கிறிஸ்து வரும்பொழுது குற்றமற்றதாயிருக்க வேண்டும். **உத்தமனுக்கு கர்த்தர் துணையாயிருப்பார்** (நீதி. 10:29). நோவாவைப்போல் உத்தமமாய் வாழ்ந்து நம் குடும்பத்தை இரட்சித்துக் கொள்வோம். உத்தமன் என்று பாராட்டுப்பெற்ற யோபுவைப் போல் வாழ்ந்து பூமிக்குரிய, பரத்திற்குரிய இரட்டிப்பான ஆசீர்வாதத்தை அனுபவிப்போம். **என் உத்தமியே!** நீ உத்தமமாய் நடந்து நீதியை நடப்பித்து மனதார சத்தியத்தைப் பேசு. நீ பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணும்படி நான் வந்து உன்னை என்னோடு சேர்த்துக் கொள்வேன் என்கிறார் (சங். 15:2,1). அன்பானவர்களே! ஆயத்தமாய் காத்திருப்போம். மணவாளன் எதிர்பார்க்கும், சகோதரியாய், மணவாளியாய், பிரியமாய், புறாவாய், உத்தமியாய் வாழ்ந்திருப்போம். ஆமென்!!!

## நமது தேவன் நம்மை நடத்துகிற விதம்

*1. போதித்து நடத்துகிறார் - ஏசா 48:17, சங்32:8.*

*2. சிட் சித்து நடத்துகிறார் - எபி 12: 7.*

*3. சோதித்து நடத்துகிறார் - உபா 8:2.*


*4. ஆதரித்து நடத்துகிறார் - 2நாளா 32: 22.*


*5. ஆசீர்வதித்து நடத்துகிறார் - ஏசா 58:11.*

*6. கரம் பிடித்து நடத்துகிறார் - சங் 139:10.*

*7. தடைகளை தகர்த்து நடத்துகிறார் - மிகா 2:13.*


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.



















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6:30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



"Registered" with RNI No: TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**


























**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
ஒரு புதிய அத்தியாயம்**

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

To:

**திருமறை தியானம்**

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 - 7:00 மணி |
| வெள்ளி | காலை 7:30 - 8:00 மணி |

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.